OS 58/2020

பி.வா.சா.1 பூபதி த/பெ பொன்னுசாமி

நாள் 04.03.2025

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்து ஆரணி தாலுக்கா ஆகாரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் பிறந்து வளர்ந்தது மற்றும் என் பூர்வீகம் ஆகாரம் கிராமம் என்றால் சரிதான். தாவா சொத்து அளவானது 2 ஏக்கர் என்றால் சரிதான். என் அப்பா பெயர் பொன்னுசாமி கவுண்டர் என்றால் சரிதான்.

2. என் அப்பா பொன்னுசாமி கவுண்டருக்கு நான் ரிஷிகேசன், தேவராஜ், பஞ்சாட்சரம் ஆகிய நால்வர் வாரிசுகள் என்றால் சரிதான். பஞ்சாட்சரம் மூத்தவர் என்றால் சரிதான். அதன்பிறகு தேவராஜ், ரிஷிகேசன் மற்றும் நான் என்றால் சரிதான். பஞ்சாட்சரம் திருமணம் ஆகாமலேயே இறந்து விட்டார் என்றால் சரிதான்.

3. என் மனைவி பெயர் சாந்தி. நீலகண்டன் என் மகன் என்றால் சரிதான். என் மகன் நீலகண்டன் காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். அவ்வாறு என் மகன் காதல் திருமணம் செய்துகொண்டது எனக்கும் என் மனைவிக்கும் மற்றும் என் மகள்களுக்கும் விருப்பம் இல்லை என்றால் சரிதான். என் மகன் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு அவர் காதலித்த பெண்ணை விட்டுவிட்டு வரும்படி நாங்கள் சொன்னோம் என்றால் சரிதான் ஆனால் அவர் வரவில்லை. அதனால் எங்கள் வீட்டில் உள்ள அனைவரின் எதிர்ப்பை மீறி என் மகன் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். அப்போது அவருக்கு 15 வயதாகும். என் மகன் 15 வயதில் திருமணம் செய்து கொண்டதாக சொல்வது தவறு என்றும் மேஜர் ஆன பிறகு தான் என் மகன் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல.

4. என் மகன் காதல் திருமணம் செய்து கொண்ட விவரத்தை என் பதில் உரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது நான் என் மகன் 15 வயதில் திருமணம் செய்துகொண்டதாக சொல்கிறேன் என்றும் ஆனால் வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் அப்போது அனுப்பிய பதில் அறிவிப்பில் இந்த வழக்கு நான் தாக்கல் செய்த பதிலுரையிலும் என் மகன் 15 வயதில் காதல் திருமணம் செய்து கொண்டார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. அவ்வாறு என் மகன் 15 வயதில் திருமணம் செய்து கொண்டது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் என் மகள்கள் என்றால் சரிதான். என் மகள் சுமதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றும் ஆனால் ஏகவள்ளிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி இளங்கோ என்பவர் என் மனைவி சாந்தியின் தம்பி என்றால் சரிதான் மற்றும் பாண்டியன், ரவி ஆகியோர் என் மனைவியின் தம்பிகள் என்றால் சரிதான்.

6. 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி என்பவர் என் மகள் சுமதியின் கணவர் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியின் சொந்த ஊர் போளூர் தாலுக்கா காலசமுத்திரம் கிராமம் என்றால் சரிதான். காலசமுத்திரத்தில் தான் 5ம் பிரதிவாதிக்கும் என் மகள் 2ம் பிரதிவாதி சுமதிக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்தின் போது சுமதிக்கு 3 சவரன் நகை கொடுக்கப்பட்டது சாட்சி மேலும் சொல்கிறார் 5 சவரன் நகை கொடுக்கப்பட்டது என்று. அவ்வாறு என் மகளுக்கு கொடுக்கப்பட்ட 5 சவரன் நகையில் என் மனைவியின் தம்பிகள் பாண்டியன் மற்றும் ரவி ஆகியோர் கொடுத்த தலா 1 சவரன் நகைகள் அடங்கும் என்றால் சரிதான்.

7. என் மகள் சுமதிக்கு 2000 வருடத்தில் திருமணம் நடந்ததா என்றால் நினைவில்லை நடந்திருக்கலாம். என் மனைவி சாந்தியின் அக்கா கணவர் சின்னபையன் என்பவர் செம்மாம்பாடி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். பாண்டியன் மற்றும் ரவி என் மகள் திருமணத்தின் போது தலா 1 சவரன் நகை போட்டது போல் சின்னபையன் 1 சவரன் நகை போட்டார் என்றால் எனக்கு நினைவில்லை. பாண்டியன் ரவி மற்றும் சின்னபையன் ஆகியோர் தலா 1 சவரன் நகை என் மகளுக்கு போட்டார்கள் என்றும் என் வயது முதிர்வின் காரணமாக அந்த விவரம் எனக்கு நினைவில்லை என்றால் சரிதான்.

8. 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி என் மகளான 2ம் பிரதிவாதியை திருமணம் செய்த பிறகு தான் எங்கள் குடும்பத்திற்கு பழக்கம் என்றும் அதற்கு முன்பு 5ம் பிரதிவாதி எங்கள் உறவினர் அல்ல என்றால் சரிதான். தட்சிணாமூர்த்திக்கும் சுமதிக்கும் திருமணம் ஆன பிறகு காலசமுத்திரத்தில் தான் அவர்கள் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு குடும்பம் இருந்த தட்சிணாமூர்த்தியும் சுமதியும் தட்சிணாமூர்த்தியின் அண்ணன் தம்பிகளுக்குள் ஏற்பட்ட குடும்ப பிரச்சனை காரணமாக நான்கு ஐந்து வருடங்கள் கழித்து ஆகாரம் கிராமத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வந்த பிறகு தட்சிணாமூர்த்தி மற்றும் சுமதி இன்று வரை ஆகாரம் கிராமத்தில் தான் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

9. நான் என் பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள விவரங்களுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான்.

10. எனது ஒரே மகனான வாதி தற்போது மீண்டும் என்னிடம் வந்தால் நான் சேர்த்துக்கொள்வேனா என்றால் என் மகன் ரூ.3,00,000/- ரொக்கம் மற்றும் 21 சவரன் தங்க நகைகளை வீட்டை விட்டு செல்லும் போது எடுத்து சென்றுவிட்டார் அதனால் அவர் தற்போது என்னிடம் வந்தால் நான் அவரை சேர்த்துக்கொள்ள மாட்டேன். அவ்வாறு என் மகன் ரூ.3,00,000/- மற்றம் 21 சவரன் தங்க நகைகளை எடுத்து சென்ற விவரத்தை என் பதில் உரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

11. என் தரப்பில் என் மகள்கள் சுமதி மற்றும் ஏகவள்ளியை விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வா.சா.ஆ2 கிரையப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணன் மனைவி கவிதா என்பவர் என் பேத்தி ஆவார். வா.சா.ஆ2 கிரையப்பத்திர முன்னிலைக்கு ஆகாரம் கிராமத்தில் உள்ள 1 ஏக்கர் 57 சென்ட் நிலத்தை நான் கண்ணன் மனைவி கவிதாவிற்கு கிரையம் கொடுத்தேன் என்றால் எனக்கு நினைவில்லை. அவ்வாறு கிரையம் கொடுத்த சொத்தானது என் பூர்வீக சொத்தில் 3ல் 1 பாகத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். மீதம் உள்ள 2 பாகங்கள் ரிஷிகேஸ் மற்றும் தேவராஜ் ஆகியோருக்கு சொந்தமானது என்றால் சரிதான். பஞ்சாட்சரம் திருமணம் ஆகாதவர் என்பதால் அவருக்கு அதில் பாகமில்லை.

12. வா.சா.ஆ2 கிரையப்பத்திரத்தில் என் மகள்கள் சுமதி, ஏகவள்ளி மகன் நீலகண்டன் மற்றும் மனைவி சாந்தி ஆகிய நால்வரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது நினைவில்லை. வா.சா.ஆ2 கிரையபத்திரத்தில் கண்டுள்ள சொத்தானது எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. நான் வா.சா.ஆ2 கிரையபத்திரத்தில் பூர்வீக சொத்து என்று தான் சொல்லியுள்ளேன் என்றும் ஆனால்

வழக்கிற்காக அவ்வாறு சொல்லவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. வா.சா.ஆ2 கிரையபத்திரம் நான் கவிதாவிற்கு எழுதி கொடுத்த போது அந்த கிரையபத்திரத்தில் நான் சொல்லி தான் தயார் செய்தார்கள் என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ1 கிரையபத்திரத்தின் மூலம் நான் ஆதிமூலத்திடம் இருந்து ஆகாரம் கிராமத்தில் 2 ஏக்கர் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அவ்வாறு வா.சா.ஆ1 முன்னிலைக்கு நான் ஆதிமூலத்திடம் கிரையம் வாங்கும் போது நான் என் மனைவி மகள்கள் சுமதி ஏகவள்ளி மற்றும் என் மகன் நீலகண்டன் ஒன்றாக தான் குடும்பமாக இருந்தோம் என்றால் இல்லை. வா.சா.ஆ1ன் சாட்சி கையெழுத்து செய்துள்ள வரத கவுண்டர் மகன் துரைசாமி என் நண்பர் என்றால் சரிதான். அந்த துரைசாமி தான் வா.சா.ஆ1 முன்னிலைக்கு சொத்து வாங்குவதற்கு என் உடன் இருந்து செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

15. வா.சா.ஆ1 முன்னிலைக்கு கிரையம் வாங்கும் சமயத்தில் சுமதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றும் நீலகண்டனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். நீலகண்டன் திருமணம் செய்து கொள்வதற்கு முன்புவரை நான் என் மனைவி மகள்கள் மற்றும் நீலகண்டன் ஒன்றாக தான் குடும்பம் இருந்தோம் என்றால் சரிதான். ஆடு, மாடு விற்று தான் அந்த சொத்தினை வாங்கினேன் வாதிக்கும் அந்த சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. நாங்கள் எல்லோரும் கூட்டு குடும்பமாக இருந்தபோது தான் வா.சா.ஆ1 முன்னிலைக்கு கிரையம் வாங்கப்பட்டது என்றால் இல்லை. நான் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கிய சொத்தாகும்.

16. நான் சொல்வது தவறு என்றும் வா.சா.ஆ1 முன்னிலைக்கு கிரையம் வாங்கும் சமயத்தில் நாங்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்து வந்தோம் என்றும் வாதியும் சேர்ந்து ஆடு, மாடுகள் வளர்த்து விற்று அதில் வந்த வருமானத்தை கொண்டு தான் வா.சா.ஆ1 முன்னிலைக்கு கிரையம் வாங்கப்பட்டது என்றும் குடும்பத்தில் மூத்தவர் என்ற முறையில் என் பெயரில் அந்த கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 முன்னிலைக்கு கிரையம் வாங்கப்பட்ட சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்றும் அதில் எனக்கும் என் மகள்கள் சுமதி, ஏகவள்ளி மற்றும் என் மகன் நீலகண்டன் ஆகியோருக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)